குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.95/2019

அ.சா.3

2024–ம் ஆண்டு நவம்பர் 14–ம் தேதி வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சேட்டு | ஜாதி | |
| தந்தை பெயர் | பெரியதம்பி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.58 மணி,

Accused A1.Kaliya Moorthi and A2.Ramasami Present. Advocate Mr.A.Nagendiran present for A1 and for Advocate Mr.Kannan for A2. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் தாரமங்கலத்தில் குடியிருந்து, பூக்கடை வைத்துள்ளேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தெரியும். வழக்கு சம்பவத்தின்போது, அவர்கள் இருவரும் எனக்கு சொந்தமான வீட்டில் வாடகைக்கு குடியிருந்து வந்தார்கள். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு, இரவு 01.00 மணியளவில், அ.சா.2 ரமேஷ் வேலைக்கு சென்றுவிட்டிருந்த சமயத்தில், காவியா 5 பவுன் செயினை பறித்துக் கொண்டு சென்று விட்டதாக அழுது கொண்டு வந்து என்னிடம் சொன்னார். காவியா, வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தபோது, அவரது கழுத்திலிருந்த செயினை யாரோ பறித்துவிட்டதாக சொன்னார். போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**2.** இவ்வழக்கு தொடர்பாக, ஒருநாள் இரவு 01.00 மணிக்கு போலிசார் என்னை விசாரித்தனர். தேதி எனக்கு நினைவில் இல்லை. போலிசார் வந்தபோது, மோப்பநாய் கொண்டு வந்தார்களா என்றால் இல்லை. அ.சா.1–டம் இருந்து, பறிக்கப்பட்டதாக சொல்லப்படும் நகை எத்தனை பவுன் கொண்டது என்றும், அதன் வடிவம் குறித்தும்

எனக்கு தெரியாது. நான், காலை 07.00 மணிக்கு பூ விக்க செல்வேன். சம்பவத்தன்று காலை 07.00 மணிக்கு பூ விற்க சென்று, இரவு 08.00 – 09.00 மணியளவில் வீட்டிற்கு வந்தேன். போலிசார் சம்பவம் குறித்து என்னிடம் விசாரித்தபோது, எதுவும் எழுதவில்லை.

3. அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.08 மணி,

ஓம்/–ச.ஷர்மிளா.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.